# சன்மார்க்க சாதகன் உள்ளம்

## 1. மழலைச் சிறு விண்ணப்பம்

(1965 சென்னை லயோலா கல்லூரி விடுதியில் தங்கியிருந்த நேரம், தினமும் மாலை மைதானத்தில் சுழுமுனைத் தியானம் செய்வது வழக்கமாய் இருந்தது. அறையில் வள்ளல் பெருமான் வழிபாடு. இதனை மற்ற மாணவர்கள் பரிகாசம் செய்தபோது, இக்கவிதையை பெருமான் படத்தின் முன் வைத்து கண்ணீர்க் கசிவதுண்டு.)

வள்ளலே! வடலூர்ப் பெரிய! எளியேனே
எள்ளலே தொழிலாய் என்றும் எங்கும்
கொள்ளலே மகிழ்வெனக் கொள்ளும் கடையரை
விள்ளலே வேண்டும் விண்ணுயர் வடிவே!

(தனிஅறையில் தங்கி தியான வாழ்க்கை மேற்கொண்டபோது, மற்றக் கெடுமதி மாணவர்கள் ஆபாச நிர்வாணப் படங்களை என் அறையில் போடுவர். அதைக்கண்டு அல்லலுற்ற மனத்தோடு எழுதி பெருமான் படத்தின் திருமுன்னர் வைத்த கவிதைகள் இவை)

விலைக்காட்டி மனதை அலைக்காட்டி வாட்டும் வணிகன் போல
உலைக்காட்டி வெந்து உலைக்காட்டி வேகும் இரும்பாய் என்னை
முலைக்காட்டி காமவலைக்காட்டி என்னைக் கவ்வப் பார்ப்பர்
சிலைக்காட்டும் உருவின் கலைக்காட்டும் நடன! காத்திடு வாயே!

வீமன் மடைத் தொழிலின் வீங்குசுவை உணவெனவே
காமப்படுவலையில் காலமெல்லாம் வீழுகின்றேன்!
ஈம உடலேனை உலகினில் ஏன் படைத்தாய்?
தாம மலர்பாத தாங்குகிலேன் தாங்கிடுவாய்!

## 2. வள்ளலார் அந்தாதி

பலவாய்த் தொழிலில் பாரினில் மூழ்கினும்
உலவா உன்னருள் உருக்கம் உளமதில்
நிலவா நாட்கள் நண்ணிய தேயிலை
வலம்பெரு வடலூர் வள்ளல்நின் அருளால்!

அருளாநின் கருணை அளவில்; உலகில்
மருளால் மக்கள் மாளாது அலையும்
பொருளை எனக்குப் போதுமெனக் கொடுத்தாய்!
உருளும் மனதில் உனைஇன்றி யாருளர்?

யாருளர் எனக்கு வையகம் தன்னில்?
பாருளர் எல்லாம் பணத்தின் பின்னால்
சீருடன் உழைத்துச் சிந்தனைச் செல்வதால்
பாருளர் மனமோ பாழ்இருள் பள்ளம்!

பள்ளத்தை நோக்கிப் பாய்ந்திடும் நீர்போல்
கள்ளத்தை நோக்கி காலமெல்லாம் ஓடிடும்
உள்ளத்தை நோக்கி உருகுலைந்து போகாமல்
வள்ளல்நின் உருவை உள்ளத்தில் நட்டேன்!

நட்டேன் நல்லதை நாய்மன அடியில்
விட்டேன் இலைஎன் வீண்பழிச் செயலை
கெட்டேன் உலகினில் கெடுமன அடிமையாய்
தொட்டேன் தொடர்பிலா தொழில்கள் பலவாய்!

பலவாய்த் தொழில்கள் பாரினில் மூழ்கினும்
உலவா உன்னருள் உருக்கம் உளமதில்
நிலவா நாட்கள் நண்ணிய தேயிலை!
வலம்பெரு வடலூர் வள்ளல்நின் அருளால்!

## 3. அறுபதில் வரும் ஞானம்

ஓடிஓடி ஓய்ந்துபோன

ஒளிஇழந்த வாழ்க்கையில்

கூடிக்கூடித் தீக்குணங்கள்

கொன்றுபோட்ட மிச்சமாய்

வாடிவாடி வலிவிழந்து

வாழ்கடையில் நிற்கிறேன்!

நாடிநாடி நின்அருளை

நாயேன் இனிப்பெறுவனோ!

## 4. வள்ளலே, வழித்துணை வா!

சோதனையைக் கண்டுச் சோர் வடையாமலும்

துன்பங்களைக் கண்டுத் துவண்டு போகாமலும்

பிரச்சனைகளைக் கண்டுப் பின் வாங்காமலும்

வஞ்சனைகளைக் கண்டு வதங்கிப் போகாமலும்

தோல்விகளைக் கண்டுத் தொலைந்து போகாமலும்

பாதகர்களைக் கண்டுப் பயந்து போகாமலும்

எல்லா நேரமும் எளியேன் வெல்லுவேன் -

வள்ளலே நீஎன், வழித்துணை வந்தால்..!